1973 ஆகஸ்ட் 8]

### 3. அறிவிப்பு

**ஜகதீஸ்வரி என்ற பெண் மகளிர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டறிக்கைகளை வீசியெறிந்தது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஜகதீஸ்வரி என்ற பெண் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து அச்சடித்த அறிக்கைகளை மன்றத்திற்குள் வீசியெறிந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது இந்த அவையின் உரிமையை மீறிய நிகழ்ச்சியாகும் என்று தெரிவித்துக் கொண்டு, இதுபற்றி பேரவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள் என அறிவிக்கின்றேன்.

### 4. அரசினர் தீர்மானம்.

**பேரவைக்குள் துண்டறிக்கைகளை மகளிர் மாடத்திலிருந்து வீசியெறிந்த ஜகதீஸ்வரிக்கு சிறைத் தண்டனை விதிப்பது குறித்து**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"இன்று 10.30 மணி அளவில் சட்டப் பேரவை பார்வையாளர்களுக்குள்ள மகளிர் மாடத்திலிருந்து ஜகதீஸ்வரி என்ற நபர் கோஷங்களைக் கூறிக்கொண்டு துண்டறிக்கைகளைச் சட்டப் பேரவைக்குள் வீசியெறிந்தார். இது இப்பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றமாகும். அவரை உடனே பிடித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நபருக்கு பதினைந்து நாட்கள் சிறைத் தண்டனை விதித்து சென்னை மத்திய சிறைக்கு அனுப்புமாறு இப்பேரவை தீர்மானிக்கிறது".

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம். உரிமைக் குழு யோசித்துப் பார்த்து தண்டனை கொடுக்கலாம். ஏன் உடனடியாக ஒரு பெண்ணுக்கு இரண்டு வாரங்கள் சிறைத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் தீர்மானம் கொண்டு வந்திருப்பதால் உரிமைக் குழுவிற்கு விடவேண்டிய தேவையில்லை. இது அவையின் உரிமையை மீறிய குற்றமாகும். எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்தக் குற்றத்தை அந்தப் பெண்மணிதான் செய்ததா அல்லது இதற்குப் பின்னால் வேறு யாராவது இருக்கிறார்களா என்பதை முழு விசாரணை செய்து அதற்கப்புறம் தண்டிப்பது சரியாகயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை அவை விசாரிக்க முடியாது. குற்றம் செய்தவர்கள்மீதுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, there is a motion before the House . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

**(2) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.**

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் தலைவரவர்களே, நேற்று ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின்மீது விவாதம் இன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை எதிர்த்து பார்வர்ட் கட்சியின் சார்பாக இந்த அரசின் மீது முழு நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது, இந்த அவை மீது நம்பிக்கை இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவிக்கும் பாணியில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.